# Valedictory Session

# Seminar on
# Conservation of Heritage Buildings/Precincts
# in Chennai Metropolitan Area
# Valedictory Session
## Presentation of the Recommendations of the Seminar

by
Tmt. Susan Mathew IAS,
Additional Chief Secretary & Vice Chairperson,
Chennai Metropolitan Development Authority.

Hon'ble Minister for Information and Chairman, CMDA,
Worshipful Mayor,
Member-Secretary, CMDA,
Chief Planner, CMDA
Distinguished delegates,
Senior Officers of the Government,
Colleagues,
Ladies and Gentlemen.

**Proceedings and Recommendations**

- Chennai has a wealth of architectural and cultural heritage that need conservation.
- It is important that heritage buildings and precincts are protected from demolition or repairs beyond recognition, and strengthened wherever necessary to increase their life span and made usable. Their active use is one way of conserving them.
- Main causes of deterioration of the heritage buildings/precincts can be categorized as physical, chemical and biological or man-made. Deterioration has to be prevented.
- Under the guise of development, there is threat to heritage buildings/places. Neglect of them and allowing vegetation to grow over them adds to their decay.
- Heritage buildings/precincts need to be protected and conserved, and handed over safely and if possible in their pristine condition, to the future generations.
- When UNESCO, Government of India and Tamil Nadu Government are listing and taking action on preservation of world heritage, national heritage, and state heritage monuments, remains and places, the CMDA at the metropolitan level shall continue

its endeavour to identify, list and conserve, under the regulatory process, the heritage buildings and precincts, not covered by the UNESCO, Government of India or Tamil Nadu State lists.

- The Second Master Plan for Chennai contains provisions for heritage conservation. Similar provisions for listing and conservation of heritage buildings and precincts should form part of master plans for other cities and towns in Tamil Nadu.
- For the heritage conservation legislations or rules to be effective, the regulations shall be simple to follow and the authorities who deal with applications for development in and around such sites should dispose them of within a stipulated time. The process should also be transparent.
- Notification of the statutory list of heritage buildings and precincts is not an end itself. It should be followed by a conservation plan for these buildings/precincts, in phases covering all of them, and recommended to owners of the buildings.
- Financing the implementation of conservation plan should be explored; sources may be the Government of India’s Jawaharlal Nehru National Urban Renewal Mission (JnNURM) and Finance Commission grants, and State Government grants.
- It is important to assign responsibility to owners of heritage buildings to strengthen, repair, maintain, preserve and conserve them. Appropriate legal backing is essential.
- The Government of Tamil Nadu may decide early on the need for a Heritage Act to cover conservation of buildings and precincts in Tamil Nadu and constitution of Heritage Conservation Authorities at State level and District level.
- Strict enforcement of heritage rules is to be done with effective co-ordination among the agencies/departments concerned.
- Proper documentation is essentially to be done for all heritage buildings/precincts to be conserved.
- A data base on heritage buildings and precincts may be created in CMDA which can be accessed on-line by various departments/agencies such those who deal with buildings approvals, building permits, etc.
- Preparation of a directory of professionals and craftsmen as well as a manual on materials, methods, processes and techniques involved, may be attempted.

- Incentives for conservation of heritage buildings or places which may be considered may include:
- exemption of property tax,
- allowing change of use (e.g. residential to commercial, like restaurants, shops for adaptive use),
- Transfer of Development Rights (TDR) and renewable TDR (may be renewable once in 20 or 30 years), and
- I.T. exemption to the corporate sector for investment on conservation.
- The State should consider a separate budgetary allocation for conservation of heritage buildings which can be accessed by various departments/agencies.
- Due consideration for conservation of heritage buildings/precincts should be given by all the authorities concerned including urban planning authorities, Public Works Department (PWD), Government departments/agencies who own heritage buildings, religious and charitable institutions, industries, corporate firms and private firms.
- The conservation and protection of built heritage under the statutory provisions of law alone is not adequate to address the needs of heritage protection. There is a need to involve a wide range of multi-disciplinary professionals like architects, engineers, planners, historians, archaeologists and sociologists to address conservation and protection.
- Heritage conservation is not a priority in many cities/towns. Creation of an Institutional set up for conservation is necessary; to start with a Heritage Conservation Cell in the Chennai City Corporation and CMDA may be considered.
- People should be sensitized to the imperatives of heritage conservation, and the professionals involved in physical development should be motivated to be conservation oriented.
- Professional courses, in Architecture, Civil Engineering, Town Planning or such others should include the subject as part of their curriculum.
- Archaeological Survey of India (ASI) may come up with Heritage monument specific/site specific regulations early, as in metropolitan cities the listed monuments are in the midst of built up areas.

- Best practices in other cities in India in conservation may be studied and adopted for the cities/towns in Tamil Nadu.
- Promoting awareness of heritage and sensitization of people on preservation and management through out-reach programmes may be taken up.
- Cluster of heritage buildings/precincts may be identified and infrastructure developed for heritage walks or tourism circuits.
- Due attention should be given to environmental impact and issues in the conservation of heritage buildings and precincts such as storm water drainage, water conservation, waste water disposal and effect of air pollutants.
- People’s involvement and co-operation is vital in heritage conservation. In the past many monuments were found protected against demolition by people’s movement.

*****

# சென்னைப் பெருநகரப் பகுதியில் பாரம்பரியமிக்க கட்டிடங்களை மற்றும் இடங்களை பாதுகாத்தல் – கருத்தரங்கின் நிறைவு விழா

## சிறப்புரை

**திரு மா.சுப்பிரமணியன்**
**வணக்கத்திற்குரிய மேயர், சென்னை மாநகராட்சி**

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உபதலைவர் திருமதி சூசன் மாத்யூ அவர்களே, உறுப்பினர்–செயலாளர் திரு.தயானந் கட்டாரியா அவர்களே, நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆலந்தூர் திரு. R.S.பாரதி அவர்களே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை திட்ட அமைப்பாளர் திரு. B.S.இரவீந்தரன் அவர்களே,

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடத்தும் சென்னைப் பெருநகர் பாரம்பரிய இடங்கள் பாதுகாத்தல் பற்றி காலையிலிருந்து நடந்து கொண்டு வரும் இக்கருத்தரங்கில் நான் பங்கு கொள்ள கொடுத்த வாய்பிற்கு நன்றி கூறுகிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடத்திக் கொண்டிருக்கும் கருத்தரங்கில் காலையிலிருந்து பல்வேறு தலைப்புகளில் பல்வேறு மாநிலங்களிலிருந்து பேச்சாளர்களை வரவழைத்து அதை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உப தலைவர் தொகுத்து கொடுத்தார்.

சென்னைப் பெருநகரில் உள்ள நீர் நிலைகளைப் பற்றி செ.பெ.வ.கு நடத்திய கருத்தரங்கு பயன் உள்ளதாக இருந்தது. ஒரு நகரத்திற்கு ஆறுகள்தான் அழகு. எந்த நகரத்திற்கு சென்றாலும், அந்த நகரத்தின் பெயர் சொல்லும் நதிகள் உள்ளன. மாஸ்கோ நதி, தேம்ஸ் நதி, சிங்கப்பூர் நதி போன்ற நதிகளை உதாரணமாகக் கூறலாம். ஆனால் நம்மால் கூவம், பக்கிம்காம் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய் போன்ற பல்வேறு நீர் நிலைகள் இருந்தாலும் இவற்றை பெருமை என்று நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடியாது. இவற்றில் குப்பையை கொட்டுகிறார்கள் மற்றும் கழிவுநீரை விட்டுவிடுகிறார்கள். ஆக்கிரமிப்புகளால் ஆறு குறுகி வெள்ள பாதிப்பு ஏற்படுகிறது.

சென்னைப் பெருநகரில் உள்ள நீர் நிலைகள் குறித்து நடந்த கருத்தரங்கின் பரிந்துரைகளின் படி சென்னை மாநகராட்சி ரூ.1448 கோடிகளுக்கு திட்டங்கள் தயாரித்து மைய அரசுக்கு 4 நிலைகளாக பிரித்து சமர்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் விருகம்பாக்கம் கால்வாய், பக்கிம்காம் கால்வாய் எவையானலும் சரி அவற்றை தூர்வாரி ஆழப்படுத்தி குப்பைகளை தவிர்த்து இந்நீர் நிலைகளை சுத்தப்படுத்த தொடங்கியுள்ளோம். இரண்டாண்டுகளில் ஆழம் மற்றும் அகலப்படுத்தி அதாவது பக்கிம்காம் கால்வாய் 10 மீட்டரிலிருந்து 100 மீட்டர் அகலமாக மாறும். இதை இந்த நிகழ்வை நான் சொல்லக் காரணம் ஏற்கனவே அளித்துள்ள பரிந்துரைகளை நிறைவேற்றி வருகிறோம். இப்பொழுது மக்களிடம் நமது வீடு நமது நகரம் இவற்றை நாம் பேணி பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் வந்துள்ளது.

பாரம்பரியக் கட்டிடம் பற்றி கருத்தரங்கு நடத்தி 29 பரிந்துரைகளை உபதலைவர் படித்துக் காட்டினார்கள். ஏற்கனவே நீர்நிலைகள் கருத்தரங்கில் கூறிய பரிந்துரைகளை செயல்படுத்தியவாறு இவற்றையும் செயல்படுத்துவோம்.

என்னை, மத்திய சிறை சாலைக்கு அருகே உள்ள ஒரு கல்லறையில் நடத்திய ஓர் விழாவிற்கு கத்தோலிக்க பாதிரியாளர்கள் அழைத்திருந்தார்கள். இந்த கல்லறை கட்டி 150 ஆண்டுகள் ஆகிறது. இது பழைமை வாய்ந்தது. இதை பாரம்பரியமிக்க இடமாக என்னால் காணமுடிந்தது. இந்த விழாவில் இந்த கல்லறையில் படிகட்டுகள் அமைக்கவும் மற்றும் உயர்கோபுர விளக்கு அமைக்கவும் கோரிக்கை வைத்தார்கள். சென்னை மாநகராட், 38 எரியூட்டும் இடங்களை அழகு மிக்க தோற்றமாக மாற்றியுள்ளது. இலவச எரிப்பு, நவீன உத்திகள், இலவச ஆம்புலன்ஸ் சேவை போன்ற அறிவிப்புகள் இருந்தாலும், இந்த கல்லறையை அழகு படுத்த மற்றும் படிகள் அமைக்க கோரிக்கை வந்தது. இதை நிறைவேற்றி ஒரு திட்டம் அமைக்க அலுவலர்களை கேட்டுக் கொண்டு உள்ளேன்.

சென்னை மாநகராட்சி சென்னையில் 8 சுரங்கப் பாதைகள் மற்றும் 8 மேம்பாலங்களைக் கட்டி அவைகள் திறந்து வைக்கப்பட்டது.

1966 ல் கட்டப்பட்ட ரிசர்வ் வங்கி அருகே உள்ள சுரங்கப்பாதை, சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே உள்ள சுரங்கப்பாதை, கோடம்பாக்கம் மேம்பாலம் இவற்றை அழகு படுத்த உள்ளோம். இது அரசின் கடமை என்பதால் இவற்றை செய்துள்ளோம். செய்ய இருக்கின்றோம்.

ரிப்பன் கட்டிடம் 1913ல் கவர்னர் ஜெனரல் ரிப்பன் கட்டியுள்ளார். 90 ஆண்டுகள் முடிவடைந்ததால் ஓர் விழா கொண்டாடினோம். 98 ஆண்டுகள் நிறைவேற்றியதால், ஒரு தபால் தலை வெளியிட கோரிக்கை விடுத்தோம். 100 ஆண்டுகள் முடிந்தால் தான் தபால் தலை வெளியிட முடியும் என்று கூறினார்கள். ஆனால் தபால் உறை வெளியிடப்பட்டது. பழமைதான் என்றும் நிலைத்திருக்கும். 2013 ஆண்டு தபால் தலை வெளியிடப்படும்.

ஜவஹர்லால் நேரு நகர புணரமைப்பு திட்டத்தின் கீழ் இந்த மாளிகையை புணரமைக்க திட்டங்கள் சமர்ப்பித்தோம். முதலில் மறுக்கப்பட்டது.

1866 ஆண்டு விக்டோரியா ஹால் கட்டப்பட்டது. அதில் 32 கடைகள் இருந்தது. ஓர் விளையாட்டு நிறுவனமும் இருந்தது. அது சமூக விரோத செயல் செய்யும் இடமாக இருந்தது. இந்த இடத்தில் மகா கவி பாரதியார், கோகலே போன்றவர்கள் உரையாற்றிய இடமாக இருந்தது. இந்த கட்டிடத்தை புனரமைக்க ரூ.3.3 கோடி நிதியுதவிக்கு JnNURM ல் சமர்ப்பித்தோம். முதலில் மறுக்கப்பட்டது. பழைய கட்டிடங்களுக்கு நிதியுதவி இல்லை என்று கூறப்பட்டது. இந்தியாவிலேயே முதல்முறை ரிப்பன் கட்டிடம் மற்றும் விக்டோரியா ஹாலுக்குத் தான், ஜவஹர்லால் நேரு நகர புணரமைப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி கிடைத்தது. இன்னும் 6 மாத காலங்களில் விக்டோரியா ஹால் திறக்கப்படும். 500 – 600 இருக்கைகள் கொண்ட விக்டோரியா ஹாலில் நிகழ்ச்சிகள் நடத்த ஒரு ஹால் கட்டப்படுகிறது. தற்போது இது சென்னை மாநகராட்சி

ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. அங்கு இலக்கிய நிகழ்வுகள் மற்றும் பொது மக்கள் கண்டு களிக்க Light and Sound show நடத்த உத்தேசித்துள்ளோம்.

ரிப்பன்கட்டிடத்தில் பாரம்பரிய பற்றி ஒரு பொருட்காட்சி அமைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

சென்னை மாநகராட்சி 102 வது வட்டத்தில் 60 ஆண்டுகளாக ஒரு ஹாஸ்பிடல் உள்ளது. அது ஒழுகும் தன்மையுடன் இருந்தது. அந்த ஆஸ்பத்திரியை அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்றார்கள். ஆனால் நான் அதை பழைமை மாறாமல் புனரமைக்க வேண்டும் என்று சொல்லி அதையும் செய்துள்ளோம்.

இதையெல்லாம் நான் சொல்லக் காரணம் பழங்கால கட்டிடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த கருத்தரங்கில் கூறப்பட்டுள்ள அணைத்து பரிந்துரைகளையும் சென்னை மாநகராட்சி கருத்தில் கொண்டு செயல்படுத்தும்.

*****